**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2026 ஆம் வருடம் ஜனவரி மாதம் 09-ஆம் நாள், வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மார்கழி மாதம் 25-ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.04/2025 இன் அ.வ.எண்.40/2022**

நரேந்திர பிரபு ... மனுதாரர்/வாதி

/எதிர்/

மாவட்ட சிறுதொழில் வளர்ச்சி கழகம், பேட்டை,
அதன் மேலாளர் மூலம் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 05.12.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. ஜாண் சந்திரராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசாங்க வாதுரைஞர் திரு. V.முத்துகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, 19.06.2024 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தவை நீக்கறவு செய்து அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.09 14:20:44 +0530

1) <u>மனுவின் சுருக்கம்</u>:

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கில் குறுக்கு விசாரணைக்காக 19.06.2024 ல் வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் மனுதாரர் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எனவே மனுதாரருக்கு எதிராக 19.06.2024 ல் தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர் தற்போது நோயிலிருந்து மீண்டுவிட்டார். மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே, 19.06.2024 தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தரவை நீக்கறவு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>:

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் அசல் வழக்கில் தொடர்ச்சியாக 18.03.2024, 04.04.2024, 29.04.2024, 19.06.2024 ஆகிய தேதிகளில் இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் எந்தவித காரணங்களும் கூறாமல் வந்துள்ளார். மேற்படி மனுதாரரின் வருகையின்மைக்கு தெளிவான காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேற்படி மனுதாரர் கூறும் காரணத்தை இந்நீதிமன்றத்தில் நிரூபிக்கும் பொருட்டு எந்தவித ஆவணங்களும் மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.09 14:20:57 +0530

செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது குறுக்கு விசாரணைக்காக 19.06.2024 ல் வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் மனுதாரர் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என காரணம் தெரிவிக்கப்பட்ட போதிலும், மேற்படி காரணத்தை நிரூபிக்க வாய்மொழி மற்றும் ஆவண சான்றுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இருப்பினும், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது.

இறுதியாக, இம்மனுவானது ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 19.01.2026 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 20.01.2026.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் ஜனவரி மாதம் 09-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.09 14:21:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>:  இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.09 14:21:12 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வள்ளியூர்.**

**மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,**

**வரைவு, சீரான உத்தரவு**

**இ.ம.எண்.**04/2025 **இன்**

**அ.வ.எண்.**40/2022

**தேதி.**09.01.2026